16.02.2026 O.S. 147/2021 பி.வா.சா 1 பாலாஜி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சென்னையில் அப்பலோ மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 1285/2007 ல் கிரையம் வாங்கினேன். மொத்தம் நான் 4 ஏக்கர் 93 செண்ட் இடத்தை நிலத்தை கிரையம் வாங்கினேன். எனக்கு பல சொத்துக்கள் உள்ளது. எனக்கு சுமார் 55 ஏக்கர் சொத்து இருக்கும். இந்த சொத்து சம்பந்தமாகவோ அல்லது அருகில் உள்ள சொத்து சம்பந்தமாகவோ நான் வேறு யார் மீதும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. வேறு நபர்கள் என் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அது தள்ளுபடியாகிவிட்டது. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கின் எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் என் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். எதிர்வழக்குரையில் நான் கூறியுள்ள வழக்கின் எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண். எண். 2/2014 என்ற வழக்கின் தீர்ப்புரையின் நகல் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது, அந்த வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் சரிதான். நான் மேல்முறையீடு செய்துள்ளேன். அந்த மேல்முறையீடு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்நீதிமன்றத்தில் மகேஸ்வரி, ரமேஷ் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இருக்கலாம். அந்த வழக்கும் எனக்கு விரோதமாக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் தெரியவில்லை. அந்த தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக மதுரை உயர்நீதிமன்ற

கிளையில் 2ம்மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொத்துக்களை கிரையம் வாங்கிவிட்டு கிரையம் பெற்ற நபர்கள் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அவர்கள் அனைவரும் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய ஆரம்பித்தார்கள். இது சம்பந்தமாக நான் காவல்நிலையத்திலும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமும் புகார் கொடுத்துள்ளேன். அந்த தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளில் நான் ஆஜராகி உரிய ஆவணங்களை தாக்கல் செய்து என்னுடைய வழக்கை நிலைநாட்டியிருக்கலாம் என்றால் நான் ஆஜராகி வழக்கை மேல்நடத்தினேன். என் மனைவி தான் முன்னாள் சுகாதார துறை அமைச்சர் என்றால் சமூகநலத்துறை அமைச்சர் ஆவார். அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. பாதிக்கப்பட்ட நபர்கள் தான் காவல்துறையில் புகார் கொடுத்தார்கள் என்றும், எனது மனைவியின் அதிகாரத்தை பயன்படுத்தி காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவிடாமல் தடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் சொத்துக்களை வாங்குவதற்கு முன்னர் ஆவணங்கள், வில்லங்கம் அனைத்தையும் எடுத்து பார்த்த பின்னர் தான் சொத்தை வாங்கினேன். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை படித்து பார்த்னோ என்றால் படித்து பார்த்தேன். வழக்கு சொத்து 1923ல் சண்முகத்தாய் அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சண்முகத்தாய் அம்மாள் உயிருடன் இருக்கும்வரையில் சொத்துக்களை பிரித்து கொடுக்கவில்லை என்றும், ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சண்முகத்தாய் அம்மாள் அவரது மருமகள் சண்முகத்தாய் அம்மாளுக்கு

1993 ம்ஆண்டு எழுதி கொடுத்துள்ளார். 1993 ல் சண்முகத்தாய் அம்மாள் அவரது மருமகளுக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும், ஆறுமுக கரையாளர், பரமசிவ கரையாளர் ஆகியோர்களிடம் இருந்து வேலாயுத ராஜா என்பவர் பொது அதிகார ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றும், சண்முகத்தாய் அம்மாளுக்கு எந்த சொத்தும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வேலாயுத ராஜா தான் 55 ஏக்கர் சொத்துக்களை தான் வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. வேறு நபர்களிடமும் வாங்கினேன். வேலாயுதராஜா யார் மூலம் எவ்வாறு விற்பனை செய்தார் என்றால் வேலாயுதராஜா அகிலாண்டம், முப்புடாதி, அரிலிங்கம் ஆகியோர்களிடமிருந்து படிப்படியாக நான் கிரையம் பெற்றேன். நான் இறுதியாக அரிலிங்கத்திடம் தான் கிரையம் வாங்கினேன். வேலாயுதராஜா நல்லத்தாய் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அந்த ந்ல்லத்தாய் அகிலாண்டம் என்பவருக்கு பொதுஅதிகார ஆவணம் மட்டுமே எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன்பிறகு அகிலாண்டம் என்பவர் மறுபடியும் முப்புடாதி என்பவருக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். முப்புடாதி என்பவர் அரிலிங்கத்திற்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்என்றும், எந்த தேதியில் எழுதிகொடுத்துள்ளார் என்றால் தேதி ஞாபகமில்லை. 2007 ம் ஆண்டு எழுதிக்கொடுத்தார். 2007 ம் ஆண்டில் அதே தேதியில் அரிலிங்கத்திடம் இருந்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் 2007 ம் ஆண்டு கிரையம் வாங்கினேன். வழக்கு சொத்துக்களை நான் கிரையம் வாங்கும் போது எனது மனைவி 2006 முதல் 2011 வரை அமைச்சராக இருந்தார் என்றால் சரிதான். நான் சொத்துக்களை சட்டபடியாக வாங்கவில்லை என்றும், சொத்துக்களின் பெயர் உள்ள

நபர்களை பொறுத்து அதே பெயர் கொண்ட நபர்களை வைத்து மிரட்டி கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை கிரையம் வாங்கிய விபரத்தை நான் வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன். அந்த கணக்குகளை தேவைப்பட்டால் முன்னிலைப்படுத்த தயாராக உள்ளேன். வழக்கு சொத்தில் தற்போது காலிமனையாக உள்ளது. சில சொத்துக்கள் ஆலடி அருணா பவுண்டேசன் கல்லுரிக்காக கொடுக்கப்பட்டது. ஆலடி அருணா பவுன்டேசன் என்பது யார் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் என்.ஜி.ஓ. வாக ஆரம்பிக்கப்பட்டது. நான் தான் அதற்கு சேர்மேன் ஆவேன். இந்த கல்லூரி ஆரம்பித்து 17 ஆண்டுகள் கடந்து விட்டது. இந்த கல்லூரி ஆரம்பிக்கும் போது எத்தனை ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. 17 ஆண்டுகளுக்கு முன்னர் 5 ஏக்கருக்குள் தான் கல்லுரியை ஆரம்பிக்கப்பட்டது என்றும், கல்லுரி ஆரம்பித்த பின்னர் பக்கத்தில் உள்ள சொத்துக்களை ஆக்கிரமித்து வெவ்வேறு நபர்கள் பெயரில் பதிவு செய்து எங்களது கல்லூரி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது பினாமியான வேலாயுதராஜா என்பவர் பெயரில் கிரையம் பெற்று சில நபர்கள் பெயரில் மோசடியாக மாற்றம் செய்து அதன் பிறகு என் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் வேலாயுத ராஜா யார் என்றே தெரியாது. எனது மாமா ஆலடி அருணா கடந்த 1996 ம் ஆண்டில் இருந்து 2001 வரை சட்டத்துறை அமைச்சராக இருந்தார். நாங்கள் அப்பாவி மக்களை ஏமாற்றி அந்த சொத்துக்கள் பெயரில் உள்ள உண்மையான நபர்களிடம் வாங்காமல் அதே பெயர் கொண்ட வேறு நபர்களிடம்

மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1993ம் ஆண்டு இந்த வாதியின் தகப்பனாரை போல் வேறு நபரை வைத்து கையெழுத்து பெற்று சொத்துக்களை வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் பரமசிவ கரையாளரும், ஆறுமுக கரையாளாரும் எங்களுக்கு சொத்துக்களை எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த நபர்களிடம் நாங்கள் நேரடியாக கிரையம் வாங்காததால் அது பற்றி விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் பங்கை வேலாயுதராஜாவை வைத்து மோடிசயாக கிரையம் பெற்றுள்ளதால் வாதிகள் கோரியபடி வழக்கு சொத்தில் வாதிகளுக்கு பங்கு உள்ளது என்றால் சரியான ஆவணங்கள் மூலம் தான் கிரையம் வாங்கியுள்ளோம். வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதியை வாதிகளின் பெரியப்பா தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியவில்லை. எங்களது அதிகாரத்தை பயன்படுத்தி சொத்துக்களை கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி அவர்களுக்கு பாகம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர்கோரூரிமை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்பட்ட அ.வ.எண். 2/2014 என்ற வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்புரை வா.சா.ஆ 10 ஆகும்.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.